செய்தி வெளியீடு எண்: 207 நாள்: 05.03.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.3.2019) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், பாலமலை சாலையில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். மேலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் 1558 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 42 சாலைப் பணிகள் மற்றும் 6 பாலப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், பாலமலை சாலையில் 19 மீட்டர் நீளத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இப்புதிய சிறுபாலம் திறக்கப்பட்டதன் மூலம், வஞ்சிமாநகர், கணேசபுரம், காமாட்சிபுரம், விஜயலட்சுமி நகர், சாமிசெட்டிப்பாளையம், கூ.கவுண்டம்பாளையம், நாயக்கன்பாளையம், கோவனூர் மற்றும் திருமாலூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பயனடைவர்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில், 422 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 65.6 கிலோ மீட்டர் நீள 4 சாலைப் பணிகள்;

வேலூர் மாவட்டத்தில், 79 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 60.45 கிலோ மீட்டர் நீள 6 சாலைப்பணிகள்;

விழுப்புரம் மாவட்டத்தில், 56 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 63.91 கிலோ மீட்டர் நீள 5 சாலைப் பணிகள்;

கடலூர் மாவட்டத்தில், 41 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 26.6 கிலோ மீட்டர் நீள 2 சாலைப் பணிகள்;

நாமக்கல் மாவட்டம், சோளக்காடு – தின்னனூர் சாலை முதல் வாளவந்தி – செல்லிப்பட்டி சாலை, சக்கரைபட்டி மற்றும் சித்துருவி சாலையில் 5 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒரு பாலப் பணி;

தருமபுரி மாவட்டம், அரூர் புறவழிச்சாலையில், 7 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 2.4 கிலோ மீட்டர் நீள ஒரு சாலைப் பணி;

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 24 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 21.6 கிலோ மீட்டர் நீள 2 சாலைப் பணிகள்;

கரூர் மாவட்டம், பொய்யாமணி – இனுங்கூர் சாலையில் 1 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒரு பாலப் பணி;

கோயம்புத்தூர் மாவட்டம், அத்திபாளையம் – வெள்ளமடை சாலையில் 6 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 5.08 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் மற்றும் இராமநாதபுரம் – சுங்கம் சந்திப்பு, ஜி.என். மில்ஸ் சந்திப்பு மற்றும் கவுண்டம்பாளையம் சந்திப்பு ஆகிய இடங்களில் 360 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 3 மேம்பாலப் பணிகள்;

திருப்பூர் மாவட்டத்தில், 29 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 15.6 கிலோ மீட்டர் நீள 2 சாலைப் பணிகள்;

ஈரோடு மாவட்டத்தில், 28 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 21.4 கிலோ மீட்டர் நீள 2 சாலைப் பணிகள்;

நீலகிரி மாவட்டத்தில், 25 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 6.6 கிலோ மீட்டர் நீள 3 சாலைப் பணிகள்;

மதுரை மாவட்டத்தில், 339 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 30.26 கிலோ மீட்டர் நீள 6 சாலைப் பணிகள், 3 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒரு பாலப் பணி;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் – மன்னார்குடி – அதிராம்பட்டினம் சாலையில், 11 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 6.4 கிலோ மீட்டர் நீள ஒரு சாலைப் பணி;

திருவாரூர் மாவட்டம், குடவாசல் – கொராடாச்சேரி – வெட்சுமாங்குடி – மாவூர் சாலையில், 40 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 27 கிலோ மீட்டர் நீள ஒரு சாலைப்பணி;

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் – தேவனூர் – வாரியங்காவல் சாலையில், 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 15.2 கிலோ மீட்டர் நீள ஒரு சாலைப் பணி;

பெரம்பலூர் மாவட்டத்தில், 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 15.02 கிலோ மீட்டர் நீள 2 சாலைப் பணிகள்;

திருநெல்வேலி மாவட்டத்தில், 28 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள 25.48 கிமீ நீள 3 சாலைப் பணிகள்;

என மொத்தம், 1558 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் செயல்படுத்தப்படவுள்ள திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திரு. ந. பாலமுருகன், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திருமதி என். சாந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 5.3.2019**